# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,467 — 1925 ம் ஸ்ரீ ஆனிமீ 5 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### தேசாதிபதியவர்களால் பிரசித்தம்

பெரிய பிரித்தானியாவும் அயர்லாந்தும்சேர்ந்த ஐக்கிய இராச்சியத்துக்கும், கடல்களுக்கப்பாலுள்ள ஆதிபத்திய நாடுகளுக்கும் அரசரும் சமயபரிபாலகரும் ஆகிய மகத்துவநாயக ஐந்தாம் ஜோர்ஜ் அவர்களின் நாமத்தினாலே:

சென்மயிகல் சென் ஜோர்ஜ் என்னும் மகாகீர்த்தி பொருந்திய வரிசையின் கொம்பானியன் என்னும் பட்ட வர்த்தனரும் இலங்கைத்தீவையும் அதனைச்சேர்ந்துள்ள நாடுகளையும் அரசாட்சிசெய்யும் உத்தியோகஸ்தர் சிசில் கிளமெந்தி உத்தமனார் அவர்களால் செய்யப்படும்.

### பிரசித்தம்.

சிசில் கிளெமெந்தி.

1910 ம் ஆண்டின் 6 ம் இலக்க நகராதிகாரசங்கச் சட்டத்தின் 109 (1), 110 (1) (a) ம் பிரிவுகளை அனுசரித்து இதனோடிணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையிற் காட்டியிருக்கும் வண்ணம் 1914 ம் ஆண்டு நொவெம்பர் (கார்த்திகை) மாசம் 20 ந் தேதியைக்கொண்ட 6,683 ம் இலகக கவண்மேந்துக் "கசெற்" பத்திரிகையில் வெளியிடப்பட்ட (லீவு) விடைபெறுதலைப்பற்றிய உபவிதிகளில் 15 ம் உபவிதியை கொழும்பு நகராதிகார சங்கத்தார் திரித்தியிருப்பதால் குறித்த சட்டத்தின் 109 (3) ம் பிரிவினால் நம்மீது வைக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டு, இலங்கைத்தீவின் அரசாட்சி யதிகாரியாகிய நாம் குறித்த நகராதிகாரசங்கத்தாரால் திருத்தப்பட்டபடி குறித்த உபவிதியை உறுதிப்படுத்திப் பிரசித்தப்படுத்துகிறோம்.

எங்கள் ஆண்டவரின் வருடம் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாந் தேதியிலன்று மேற்சொல்லிய இலங்கைத்தீவிலுள்ள கொழும்பில் கொடுக்கப்பட்டது.

உத்தமனார் அவர்களின் கட்டளைப்படி,

ஈ. பி. அலெக்சாண்டர்,
அக்டிங்கொலோனியல் சக்கிறுத்தார்.

மேற்சொல்லிய அட்டவணை.

15. விடுதலை (லீவு) பெற்றிருக்கும் காலம் தொடாச்சியானதாயிருக்க வேண்டும். இந்தத் தீவில் அல்லது தென்னிந்தியாவிற கழிக்கும்படி பெற்றுக்கொண்ட சரியான விடுதலை அல்லது ஓய்வு விடுதலை அன்றி, மற்றும் ஒவ்வொரு விடுதலையும் கேட்கும் காலம் ஞாயிற்றுக்கிழமைகளும் பெருநாள் விடுதலைகளும் அடங்கினதாயிருந்தபோதிலும் தொடர்ச்சியானதா யிருக்கவேண்டும்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1925 ம் ஆண்டு மாசிமீ 20 ந் திகதி பிரசுரிக்கபபட்ட 7,447 மிலக்கத்தையுடைய இலங்கை அரசாட்சி "கசெற்" பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்ட பிரமாணங்கள்.

"1898 ம் ஆண்டின் லோக்கல்வோட் கட்டளைச்சட்டம்."

"1898 ம் ஆண்டின் லோகல்வோட் சட்டத்" தின் 29A பிரிவின்படியும் 1914 ம் ஆண்டின் 29 மிலக்கச்சட்டத்தின்படி புதுப்பிக்கப்பட்டு அதிஉத்தம தேசாதிபதியவர்களால் மந்திராலோசனைச் சங்கத்தாரின் அநுமதியுடன், வதுளை லோக்கல்வோட் சங்கத்தாரால் தீர்மானிக்கப்பட்டதுமான வீதப்படி சொல்லப்பட்ட செடூலில் குறித்த காரணத்துக்காக எந்த இடத்தையும் பாவிப்பதற்கு உத்தரவுச் சீட்டுப்பெற கொடுக்கவேண்டிய பணத்தொகை விபரம்.

சிசில் கிளெமென்ரி,
கொலோனியல் சக்கிறுத்தார்.

1925 ம் ஆண்டு மாசிமீ 19 ந் திகதி.

செடூல்.

| | வருஷ வீதம். ரூ. | ச. |
|---|---|---|
| ரொட்டிப்போறணைக்கு .. .. | 25 | 0 |
| சோற்றுக்கடைக்கு .. .. | 6 | 0 |
| கோப்பி அல்லது தேத்தண்ணீர்க்கடைக்கு .. | 3 | 0 |
| மூன்றுக்கும் அல்லது அதற்குக்குறைந்த பசுக்கள் வைத்துப் பால்கறக்கும் பட்டிக்கு .. | 3 | 0 |
| மூன்றுக்கு மேற்பட்ட பசுக்கள் வைத்துப் பால் கறக்கும் பட்டிக்கு .. .. | 6 | 0 |
| வண்ணான் சீலைவெளுக்கும் இடத்துக்கு .. | 3 | 0 |
| சாதாரண விடுதிச்சாலைக்கு .. .. | 6 | 0 |
| சீனமஉரம் செய்கிற இடத்துக்கு .. | 100 | 0 |
| ஒருசாக்குக்கு மேலதிகமான அளவு சீமைஉரம் சரிக்கட்டும் சாமான்கள் குவித்துவைக்கும் இடத்துக்கு | 10 | 0 |
| இரத்தம் அல்லது உச்சிட்டம் காயவைக்கும் அல்லது அவிக்கும் இடத்துக்கு | 100 | 0 |
| தோல்பதனிடும் இடத்துக்கு .. .. | 20 | 0 |
| கொளுப்பு உருக்கும் அல்லது கொழுப்பு பிரித்தெடுக்க இடத்துக்கு .. .. | 50 | 0 |
| சவுக்காரம் சரிக்கட்டும் இடத்துக்கு .. | 50 | 0 |
| தும்பு சாயம்போடும் இடத்துக்கு .. | 2 | 50 |
| தோல் அல்லது எலும்பு சேர்த்துவைக்கும் இடத்துக்கு .. .. .. | 10 | 0 |
| சோடாத்தண்ணீர் சரிக்கட்டும் இடத்துக்கு .. | 100 | 0 |
| செங்கல்லு அல்லது ஓடு சரிக்கட்டும் சூளைக்கு | 50 | 0 |
| சுண்ணாம்பு சுடும் சூளைக்கு .. .. | 50 | 0 |

1925 ம் ஆண்டு மாசிமீ 20 ந் திகதி பிரசரிக்கப்பட்ட 7 447 மிலக்கத்தையுடைய இலங்கை அரசாட்சி "கசெற்" பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்ட பிரமாணங்கள்.

1898 ம் ஆண்டின் லோக்கல்வோட் கட்டளைச்சட்டத்தின் 56 ம் பிரிவின்படியும், 1916 ம் ஆண்டின் 27 மிலக்கத்திலும் 1921 ம் ஆண்டின் 25 மிலக்கத்திலும் அடங்கிய சட்டங்களினால் புதுப்பிக்கப்பட்டதும், அதிஉத்தம தேசாதிபதியவர்களால் மந்திராலோசனைச் சங்கத்தாரின் போதனைப்படி நிட்சயிக்கப்பட்டதுமான வதுளை லோக்கல்வோட் சங்கத்தாரின் துணைச்சட்டம்.

சிசில் கிளெமென்ரி,
கொலோனியல் சக்கிறுத்தார்.

1925 ம் ஆண்டு மாசிமீ 17 ந் திகதி.

துணைச்சட்டங்கள்.

1. நாற்றமுள்ள அல்லது தீமையான வியாபாரப் பொருள்கள். பின்னாற் சொல்லப்படும் பொருள்கள் நாற்றமுள்ள அல்லது தீமையான வியாபாரப் பொருள்கள் எனக்கவனிக்கப்படும். அவையாவன:

1. சீமைஉரம் சரிக்கட்டுதல்.
2. ஒரு சாக்குக்கு மேலதிகமாய் சீமைஉரம் சரிக்கட்டக்கூடிய சாமான்களைச் சேர்த்துவைக்குதல்.
3 இரத்தம் அல்லது உச்சிட்டம் காயவைத்தல் அல்லது அவித்தல்.
4. தோல் பதனிடுதல்.
5. கொளுப்பு உருக்குதல் அல்லது கொளுப்பு பிரித்தெடுத்தல்.
6. சவுக்காரம் சரிக்கட்டுதல்.
7. தும்பு சாயம்போடுதல்.
8. தோல் அல்லது எலும்பு சேர்த்து வைத்தல்.
9. சோடாத்தண்ணீர் சரிக்கட்டுதல்.
10. செங்கல்லு அல்லது ஓடு சரிக்கட்டுதல்.
11. சுண்ணாம்பு சுடுதல்.

2. உத்தரவுச்சீட்டு. வதுளை லோக்கல்வோட் எல்லைக்குள்ளாக, லோக்கல்வோட் சங்கத்தலைவரிடமிருந்து வருஷாந்தர உத்தரவுப்பத்திரமில்லாமல், எவனாவது ஏதொரு ரொட்டிப்போறணை, சோற்றுக்கடை, கோப்பி அல்லது தேய்த்தண்ணீர்க்கடை, மாட்டுப்பட்டி, வண்ணமைத்தொழில், சாதாரண விடுதிவீடுகள், இவை ஒன்றும் வைக்கவாவது அல்லது எந்த வீடுவாசலிலாவது நாற்றமுள்ள அல்லது தீமையான பொருள்கள் வைத்து வியாபாரம் செய்ய அல்லது செய்விக்கவாவது கூடாது. அப்படியான உத்தரவுச்சீட்டுகள், மேற்சொல்லிய வியாபாரங்களையும் இடங்களையும் அடக்கி பவுத்திரம்பண்ணி, மேற்பார்வையிட்டு ஒழுங்குசெய்து நடத்தக்கூடியதாய் உண்டாக்கிய எந்தப்பிரமாணத்தையும் மீறிய எவனுக்காவது கொடாமல் மறுதலிக்க சங்கத்தலைவருக்கு இத்தால் தத்துவமுண்டு. அப்படிப்பட்ட உத்தரவுப் பத்திரங்கள் தேசாதிபதியின் சங்கத்தில் உறுதிப்படுத்தப்பட்ட தீர்மானப்படி காலத்துக்குக்காலம் லோக்கல்வோட் சங்கத்தால் விதிக்கப்படும் பணச்செலவைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளவேண்டியது. அப்படியான ஒவ்வொரு உத்தரவுச்சீட்டும் அதுகொடுக்கப்பட்ட அந்தந்த வருஷத்தின் மார்கழிமீ 31 ந் திகதி வரைக்கும் அல்லது அது அளிக்கப்படும்வரைக்கும் பாவிக்கப்படலாம்.

3. மேற்சொல்லிய இடங்களை அல்லது வியாபாரங்களை அடக்கி, பவுத்திரம்பண்ணி, மேற்பார்வையிட்டு, ஒழுங்குசெய்து நடத்தக்கூடியதாய் உண்டாக்கிய எந்தப்பிரமாணத்தையும் மீறிய எவனையாவது, எந்தக்கோட்டிலாவது இரண்டுதரம் அல்லது அடிக்கடி குற்றப்படுத்தினால் சங்கத்தலைமையாற் கொடுக்கப்பட்ட அப்படிப்பட்டவனுடைய உத்தரவுச்சீட்டை இரண்டாம்முறை அல்லது அடுத்ததடவையில் அவனைக்குற்றப்படுத்திய அந்தக்கோட்டாருக்கு அளிக்கிறதற்கு நியாயமுண்டு. கோட்டார் அந்த உத்தரவுச்சீட்டை அளித்தபின், அப்படிப்பட்டவனுக்கு சங்கத்தலைவர் ஏதும் புது உத்தரவுச்சீட்டு கொடுக்காமல் மறுதலிக்க அவருக்கு மேலதிகமான தத்துவமுண்டு. ஆனால் இப்பிரமாணங்கள் சந்தைகளில் பிரசித்தமாய் வியாபாரம் செய்கிற வர்களுக்குப் பாவிக்கப்படா.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்

1876 ம் ஹூ-த்து 3 இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கோனகல சுயபாஷை ஆண்பிள்ளைப் பாடசாலையைப் பெருப்பிப்பது என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்சொல்லப்படும், காணிகளை அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 12 426. குறிச்சி—கோனகல.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ | றூ. | ப |
|---|---|---|---|---|---|---|
| 1 | பொற்றுதுவேகெலே .. | வழி .. | (1) டீ. எச். விஜெயவர்தன, (2) கே. ஏ. தொன் என்தோரிஸ் அப்பு | 0 | 0 | 1·7 |
| 2 | ஷை .. | தோட்டம் .. | ஷை .. .. | 0 | 1 | 20 6 |
| 3 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 0·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ம் ௵ சூலாய் மாசம் 20 ௳ தேதியிலன்று மாலை 2 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1925 ம் ௵ சூன்மீ 1 ௳.

ற்றி. பீ. றஸல்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பூஸையிலிருந்து காகொடைக்குப் போகும் இரமசங்க றோட்டை அகலிப்பது என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 12,743. குறிச்சி—கதுறுப்பே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | தீனகேவத்தை அல்லது பெரயெத்திகொறட்டுவ | தோட்டம் .. | (1) எஸ் மெண்டிஸ், எம். ஐ டீ. சில்வா .. | 0 0 3·8 |
| 2 | கெற்றகேவத்தை .. | ஷை .. | ஷை ஷை .. | 0 0 15·9 |
| 3 | திம்மலகேவத்தை அல்லது தல்ககொறட்டுவ | ஷை .. | (1) ஷை (2) பி. பாலியல்காமி (3) எம். கிரிஸ்அப்பு | 0 0 6·5 |
| 4 | கெற்றகேவத்தை .. | ஷை .. | ஏ. எஸ். மெண்டிஸ் .. .. | 0 0 19·9 |
| 5 | திம்மகேவத்தை .. | ஷை .. | பீ பாலியல்காமி, (2) எம். கிரிஸ்அப்பு .. | 0 0 8·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ம் ௵ சூலாய் மாசம் 20 ௳ தேதியிலன்று மாலை 2 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1925 ம் ௵ சூன்மீ 1 ௳.

ற்றி. பீ. றஸல்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் (1) லேலிஅம்பஸ்கூல் கட்டுகிறதற்கும் (2) டிஸ்திரிக் ரோட் கொமிட்டி சங்கத்தின் றோட்டும் கிரவல் றோட்டுக் குழி என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம்: 7,798. குறிச்சி—உடங்கம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | ரத்வத்ததோட்டம் .. | ரப்பர் தோட்டமும் மண் குழியும் | மிசாஸ் ஜோர்ஸ் ஸ்ருவாட் கொம்பனி .. | 0 1 14·53 |
| 2 | நாகமுதனவன .. | ரப்பர் மரங்கள் கொண்டது | உடயகெதர ரனசிங்க பண்டா-உடங்கம | 0 1 10·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ம் ௵ ஆடி மாசம் 3 ௳ தேதியிலன்று 10 மணிக்கு மாத்தளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளை கச்சேரி,
1925 ம் ௵ வைகாசிமீ 30 ௳.

டபிள்யு ஈ. ஹொப்டே,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புகைரதவீதியின் உபயோகத்திற்றென்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,066. குறிச்சி—யாழ்ப்பாண நகரசங்கத்தின் எல்லைக்குட்பட்ட சிவியாதெரு மேற்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 2 | புங்கடிவளவு .. | ஒரு கிணறும் மூன்று மண்வீடுகளுமுள்ள தோட்டவளவு | வே. பொன்னுத்துரை பெண் நாகம்மா; (2) பண்டாரம் சின்னத்தம்பி; (3) முருகர் கந்தையா | 0 0 18·36 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ம் ஞூ ஜூன் (ஆனி) மாசம் 29 ந் தேதியிலன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கச்சேரி
1925 ம் ஞூ மே (வைகாசி) மீ 20 ந் உ

எப். ஜே. ஸிமித்.
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் இரத்தினபுரியிலுள்ள கவண்மேந்து உத்தியோகஸ்தருக்கு வீடுகள் கட்டப்படுவதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னாச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

அளவுப்படத்து இலக்கம் 80. பகுதிப்படம் "A" குறிச்சி—மூதுவ.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1c | ககாட்டகாவத்தகேனே | 11 றபர் மரங்களும் 3 தென்னைமரங்களும் உள்ள காடு | விதானகே டொன் ஆபிரகாம் அப்புகாமி. டி குணசேகர, ஜே. எஸ். தம்பையா, டி. சி. டப்ளியு. விஜசிங்க | 1 | 3 | 6 |
| 1D | ககாட்டகாவத்த .. | நாட்டுத்தோட்டம் 4 தென்னை மற்றுமரங்களும். பிரசித்த வேலை டிப்பாட்மெந்துக்குச்சேர்ந்த 2 கட்டிடமும் | ஜே எச். எம். வஸ்தியான்குறே | 0 | 1 | 18 |
| 1E | ஷை .. | நாட்டுத்தோட்டமும் பிரசித்த வேலை டிப்பாட்மேந்து கட்டுவித்த 2 வீடுகள் | கோட்டாமுல்லகே மானத என்னும் புத்தகுரு | 0 | 0 | 4 |
| 1F | திகனகேன .. | 2 தென்னையும் 1 தோடமரமும்உள்ள நாட்டுத்தோட்டம் | விதானகே டொன் ஆபிரகாம் அப்புகாமி | 0 | 0 | 4 |
| 2C | தவலமேவத்த .. | 4 பிலாமரமும் பிரசித்தவேலை டிப்பாட்மேந்து கட்டுவித்த 2 வீடுகளும் உள்ள நாட்டுத்தோட்டம் | முறுதகெதன்கே மொகோத்தி. காமி, விதானகே டொன் ஆபிறகாம் அப்புகாமி, டி. சி. விஜசிங்க | 0 | 1 | 21·5 |
| 2D | திகனகேன .. | 1 தென்னை 4 தேக்கு மரங்களுள்ள நாட்டுத்தோட்டம் | டபிள்யு. டி. ஆபிறகாம் அப்புகாமி | 0 | 0 | 11 |
| 2E | ககாட்டகாவத்த .. | 10 பிலா, 13 தென்னைமரங்களும் 3 வீடும் 1 குடிலும் உள்ள நாட்டுத் தோட்டம் | டபிள்யு. டி. அமிஸ்அப்புகாமி கே. ஏ. லாமாஎத்தன | 0 | 1 | 26 |

அளவுப்படம் இல 80. பகுதிப்படம் B. மூதூர்.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 14A | வெறலுப்பாயகேன | காடு .. .. .. | வி. பீரிஸ் அப்புகாமியும் மறுபெயரும் | 1 | 1 | 15 8 |
| 14B | வெறலுப்பாயவத்த | 5 தென்னையும் 2 வீடுகளும் உள்ள நாட்டுத்தோட்டம் | ஷை .. | 0 | 0 | 37 |
| 14C | கறங்காகேகேன .. | காடு .. .. .. | டி. வஸ்துகாமியும் மறுபெயரும் | 0 | 3 | 19 |
| 14D | கறங்காகேவத்த .. | 5 தென்னை, 5 பலா மரங்கள் உள்ள நாட்டுத் தோட்டம் | ஷை | 0 | 2 | 15 |
| 16A | வெறலுப்பாயவத்த .. | 6 வாழை மரங்கள் உள்ள நாட்டுத்தோட்டம் | வீ. பீரிஸ்அப்புகாமியும் மறுபெயரும் | 0 | 0 | 12 |
| 16B | வெறலுப்பாயகேன | காடு .. .. .. | ஷை .. | 0 | 0 | 5·5 |
| 17A | ஷை .. | காடு .. .. .. | ஷை .. | 0 | 0 | 1·7 |

74 ம் இலக்க அளவுப்படத்திலிருந்து எடுக்கப்பட்ட கொப்பி இல. 3. மூவகம. நவதுன்கோறளை.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1J | திப்பெலகேன .. | 89 தென்னைமரங்களும். 1 கட்டிடமும் உள்ள தோட்டம் | ஆற் என் ஆசீர்வாதம். எம். ஏ. பிறன்சீஸ் குணறத்ன | ı | 0 | 28·2 |
| 1K | கெக்குன ககாவில கேன | காடு .. .. .. | டப்ளியு. எம். புஞ்சிமாத்தையா | 0 | 0 | 14·5 |
| 1ɪ | ககாட்டகாவத்தகேன | 2 றபர் மரமும், பிரசித்த வேலை டிப்பாத்துமேந்துக்குரிய 2 கட்டிடங்களும் உள்ள தென்னந்தோட்டம் | கொட்டாறமுல்ல கெகெமானந்த புத்தகுரும் இன்னுமொருவரும் | 0 | 3 | 2·35 |
| 1ɪ³ | பலயாகே ஓவித்த கேன | காடு .. .. .. | எம். ஏ றத்திறங்காமியும் மறுபெயரும் | 0 | 1 | 22·9 |
| 1ɪ⁴ | — .. | கன்சபாவ ரோட்டு .. .. | ஷை .. | 0 | 0 | 4·5 |
| 33A | கெக்குனகாவிலகேன | காடு .. .. .. | டப்ளியு. எம் புஞ்சிமாத்தையா | 0 | 0 | 21·7 |
| 33B | திப்பல்கேன் .. | புதுசாய்காடு வெட்டப்பட்ட நிலம் .. | ஆற். என். ஆசீர்வாதமும் மறுபெயரும் | 0 | 0 | 5 |

எடுத்துக் சொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ம் ஞூ ஜூன்மாசம் 22 ந் தேதியிலன்று மாலை 2 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி.
1925 ம் ஞூ வைகாசி மீ 26 ந் உ.

தீ. ஏ. ஹொட்சன்,
அரசாட்சி ஏசண்டு.

உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன் அறிவித்தல்களைக் குறிக்கும் விளம்பரங்கள்.

---

[அறிவித்தல் இலக்கம் 8,822, அநுராசபுரம்.]

இதனபின் சொலலப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1925 ம் ஞூ (ஜூன்) ஆனிமீ 5 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம். 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் பி. ஜெ. கட்சன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதன வற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

பி. ஜெ. கட்சன்,
விசேஷ உத்தியோகத்தர்.

(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ரெஜிசர்) நிலநிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சேர்வயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளுக்குள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதையறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் தம்மன்கடுவபலாத்த எகொடபத்து மாகுப்பேதுளானே பெல்லனவலக் கிராமத்திலிருக்கும் கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள்:—

இன்செற் நம்பர் 11, ரொப்போ பிரதமபடம் நம் 13.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 68 | .. | சவுக்காலை (இடுகாடு) | .. | .. | .. | .. | 0 0 36 |
| 69 | .. | திஸ்பம்ப (சுகதாரச் சேமிப்பு) | .. | .. | .. | .. | 9 0 15 |
| | | | | | | | 9 1 11 |

எல்லைகளாவன: வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு-முடிக்குரிய எலதென்கேவெலகெலே, சவுக்காலைக் காடு-மூக்கலன்யாய.

கவனிப்பு.—மேற்குறித்த எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க் குறிக்குங் காணித்துண்டுகளிவ்வறிவித்தலினின்று விலக்கப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத்தொகையாகும் 1 ஏக்கர் 36 பேட்சும் மேற்சொல்லிய 9 ஏக்கர் 1 றூட் 11 பேட்சுக்குள்ளு மடங்கவில்லை என்பதையுங் கவனிக்கவேண்டியது:—

இன்செற் நம். 11, ரொப்போ பிரதமபடம் நம். 13.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | | விசாலம் ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 70 | .. | கங்கொட | .. | .. | .. | .. | 1 0 36 |

II.—இன்செற் நம். 11, ரொப்போ பிரதமபடம் 13.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | விசாலம் ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 71 | .. | இந்திகொல்லேதம்மன (குளக்கட்டோரச் சேமிப்பு) | .. | .. | 1 1 13 |
| 72 | .. | குளக்கட்டு | .. | .. | 1 0 22 |
| | | | | | 2 1 35 |

எல்லைகளாவன: வடக்கு கிழக்கு தெற்கு-முடிக்குரிய எலதென்கேவெலகெலே சவுக்காலைக்காடு-மூக்கலன்யாய. மேற்கு-முடிக்குரிய எலதென்கேவெலேகெலே சவுக்காலைக்காடு-மூக்கலன்யாய, ஒரு குளம், முடிக்குரிய எலதென்கேவெலேகெலே சவுக்காலைக்காடு-மூக்கலன்யாய.

[அநுராசபுர வி. உ. 41—1925.]

---

[அறிவித்தல் இலக்கம் 8,823, அநுராசபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1925 ம் ஞூ ஆனிமீ 5 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகஸ்தர் பி. ஜெ. கட்சன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப் பேசப்படத்தாகிய சொல்லிய காணி முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

பி. ஜெ. கட்சன்
விசேஷ உத்தியோகத்தர்.

(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ரெஜிசர்) நிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சேர்வயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெறறுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளுக்குள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் தம்மண்கடுவைப்லாத்தை எகொடபத்து மனம்பிற்றித்துளானே கன்சுறன் காடுகே கிராமத்திலிருக்கும் கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள்:—

I.—இன்செற் நம்பர் 14. ரொப்போ பிரதமபடம் 13.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|---|
| 91 | .. | மாவிலன்கடிவெற்றைமுன்மாறி | .. | .. | .. | 4 0 7 |

எல்லைகளாவன: வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு-முடிக்குரிய எலதென்கெவெலேகெலே சவுக்காலைக்காடு மூக்கலன்யாய.

II.—இன்செற் நம்பர் 14 ரொப்போ பிரதமபடம் 13.

| காணித்துண்டு. | காணியின் பெயர் | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 92 | கற்றடிமுன்மாறி | 11 3 7 |

எல்லைகளாவன: வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு-முடிக்குரிய எலதென்கெவெலேகெலே சவுக்காலைக்காடு மூக்கலன்யாய.

III.—இன்செற் நம்பர் 14. ரொப்போ பிரதமபடம் 13

| காணித்துண்டு | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 93 | உல்பத்வளிககாடு (காடு) | 3 1 18 |
| 94 | ஷை (ரேட்டுக்காகச் சேமிப்பு) | 0 0 14 |
| 95 | பாலையடிப்பிட்டிமுன்மாறி | 3 0 8 |
| 96 | காற்பாதை | 0 0 12 |
| 97 | உல்பதவளிக்காடு (ரேட்டுச்சேமிப்பு) | 0 0 32 |
| 98 | பாலையடிப்பிட்டிமுன்மாறி | 10 3 39 |
| 99 | ஷை | 18 3 13 |
| | | 36 2 6 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-முடிககுரிய எலதென் கெவெலேகெலே சவுக்காலைக்காடு மூக்கலன்யாய; தெற்கு-முடிக்குரிய எலதென் கெவெலேகெலே சவுக்காலைககாடு மூககலன்யாய. தனுக்களஆற, (முடிககுரிய எலதென் கெவெலேகெலே சவுக்காலைககாடு மூககலன்யாய) முடிக்குரிய எலதென் கெவெலேகெலே சவுக்காலைக்காடு-மூக்கலன்யாய; மேற்கு-51,342 ம் உ. ப. ல் காணுங்காணி. முடிககுரிய பாலையடிபிட்டிமுன்மாறி

[அநுராசபுர வி உ. 42—1925.]

---

[அறிவித்தல் இலககம் 8,824 அநுராசபுரம்.]

இதன்பின சொலலப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1925 ம் ஞு (ஜூன்) ஆனிமீ 5ந் திகதி தொடக்கம் மூன்று மாசத்திற்குள் 1897ம் 1899 ம் 1900 1903 ம் ஆண்டுகளின் பாணிலச சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் பி. ஜே. கட்சன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக கொண்டுஉரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிககுரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

பி. ஜே. கட்சன்,
விசேஷ உத்தியோகத்தர்.

(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ரெஜிசர்) நில நிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சேர்வயர் ஜனறல்) நில காரியகர்த்தரிடமும் பெற்றுக கொள்ளலாம்

(b) இக்காணிகளுக்குள்ள வழியுரித்து அககாணிகளுககுள்ள உரித்தா மென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமத்திய மாகாணம் தம்மன்கடுவ பலாத்த எகொடபத்து சொரிவில்துளானே கற்றமுனைக் கிராமத்திலிருக்கும் கீழ்க்குறிககப்படுங் காணித்துண்டுகள் :—

I.—இன்செற் நம். 15. ரொப்போ பிரதமபடம் நம். 13.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 113 | சவுககாலை (இடுகாடு | 0 2 0 |
| 114 | சவுககாலைவளி (இடுகாட்டுககுவிடப்பட்ட வளிப்பாதை) | 0 0 33 |
| | | 0 2 33 |

எல்லைகளாவன: வடக்கு, கிழககு, தெற்கு, மேற்கு-முடிக்குரிய எலதென்கெவெலே கெலே சவுக்காலைக்காடு மூக்கலன்யாய.

II.—இன்செற் நம். 15 ரொப்போ பிரதமபடம் நம். 13.

| காணித்துண்டு. | காணியின் பெயர் | விசாலம், ஏ, று. ப |
|---|---|---|
| 115 | யார்காடு (சுகதாரச்சேமிப்பு) | 7 2 15 |

எல்லைகளாவன: வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு-முடிக்குரிய எலதன்கெவெலே கெலே சவுக்காலைக்காடு மூக்கலன்யாய

கவனிப்பு—மேற்குறித்த எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகளிவ்வறிவித்தலினின்று விலக்கப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத் தொகையாகும் 1 ஏக்கர் 3 பேட்சும் மேற்சொல்லிய 7 ஏக்கர் 2 றூட் 15 பேட்சுக்குள்ளொரு மடங்கவில்லை என்பதையுங் கவனிக்கவேண்டியது :—

இன்செற நம் 15. ரொப்போ பிரதமபடம் நம். 13

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம் ஏ. று. ப. |
|---|---|---|
| 116 | கற்றமுனைககுடியிருப்பு அல்லது கங்கொட | 1 0 3 |

III.—இன்செற் நம். 15. ரொப்போ பிரதமபடம் நம். 13.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 118 | யுஸ்கொர்வயல்காடு (குளககட்டுச்சேமிப்பு) | 2 2 4 |
| 119 | யுசறக்குளக்காடு (குளக்கட்டு) | 0 3 5 |
| | | 3 1 9 |

எல்லைகளாவன: வடக்கு, கிழக்கு-முடிக்குரிய எலதென்கெவெலே கெலே சவுக்காலைக்காடு மூக்கலன்யாய, தெற்கு-முடிக்குரிய எலதென்கெவெலே கெலே சவுககாலைக்காடு மூக்கலன்யாய, யுசறக்குளம் (குளம்) முடிக்குரிய எலதென்கெவெலேகெலே சவுக்காலைக்காடு மூக்கலன்யாய; மேற்கு-முடிக்குரிய எலதெகெவெலேகெலே சவக்காலைக்காடு மூக்கலன்யாய.

[அநுராசபுர. வி. உ. 43—1925.]

[அறிவித்தல் இலக்கம் 8,825, இரத்தினபுரி.]

இதனபின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1925 ம் வூ (ஜூன்) ஆனிமீ 5 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம் 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு. ரி. ஸ்ரேஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ரி. ஸ்ரேஸ்
விசேஷ உத்தியோகத்தர்.

(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ஒபிசா) நில நிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சேர்வயர் ஜனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

சப்பிரகமுவா மாகாணம் இரத்தினபுரி டிஸ்திறிக் குருவிறதிகோறளை உடபத்துதெற்கு பலகங்கொடக் கிராமத்திலிருக்கும் கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள் :—

இலங்கை யளவைப் பிரதமபட 234

| காணித் துண்டு | காணியின் பெயர் | விசாலம் ஏ. | று. | ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம் ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தொட்டஎல (சிற்ருறு) .. .. | 0 | 2 | 27 | 16 | பலகங்கொடதொல (சிற்ருறு) .. | 0 | 1 | 5 |
| 2 | கலபல்லேகேன. கிறிகல்பொததேகேன, கந்தேமணடியேகேன .. | 3 | 2 | 28 | 23 | காற்பாதை .. .. | 0 | 0 | 32 |
| 4 | கிறிகல்பொத்தேகேன அல்லது கந்தேமண்டியேகேன .. .. | 30 | 1 | 10 | 26 | பிம்மேகேன .. .. | 7 | 2 | 22 |
| 5 | கந்தேமண்டியேஹூக்கலான .. | 16 | 3 | 18 | 33 | கன்சபாவபாதை .. .. | 0 | 3 | 4 |
| 7 | பெரிய ஞேட்டு .. .. | 1 | 2 | 33 | 34 | திகஓவிற்ற .. . | 0 | 1 | 37 |
| 8 | வெலகாவகேன .. .. | 0 | 3 | 29 | 35 | எல .. .. .. | 0 | 0 | 8 |
| 11 | கொட்டவிய (நீர்ரோடை) .. | 0 | 0 | 7 | 37 | ஞேட்டுச்சேமிப்பு .. .. | 0 | 1 | 15 |
| 13 | பன்கல்கொடஓவிற்ற அல்லது பலகங்கொடஓவிற்ற .. .. | 1 | 0 | 11 | 39 | கப்புஎல (சிற்ருறு) .. . | 0 | 1 | 17 |
| 14 | எதண்டகாவஓவிற்ற அல்லது பஹுகல்கொடஓவிற்ற .. | 5 | 2 | 24 | 40 | ஷை .. .. | 0 | 0 | 35 |
| | | | | | 41 | கப்புஎலஓகந்த .. .. | 1 | 2 | 35 |
| | | | | | 42 | ஜம்புகாஓகந்த திகனேஓவிற்ற .. | 3 | 3 | 11 |
| | | | | | 43 | களுகங்க (ஆறு) .. .. | 12 | 1 | 29 |
| | | | | | | | 89 | 0 | 37 |

எல்லைகளாவன : வடக்கு-தொடம்பேயும் கொஸ்கலவும் கிராம எல்லைகள்; கிழக்கு-கொஸ்கல ககன்கம, கொவிபிற்றியக் கிராமஎல்லைகள; தெற்கு கொவிபிற்றியகிராம எல்லை நவதுன் கோறளையில்லிருக்கும் திமியாவக்கிராம எல்லை; மேற்கு-நவதுன் கோறளையில்லிருக்கும் திமியாவக்கிராமஎல்லை, தொடம்பேக் கிராமஎல்லை

கவினிப்பு—மேற்குறித்த எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித் துண்டுகளிவ்வறிவித்தலினின்று விலக்கப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத்தொகையாகும் 69 ஏக்கர் மேற்சொல்லிய 89 ஏக்கர் 37 பேட்சுக்குள்ளு மடங்கவில்லை என்பதையுங் கவனிக்கவேண்டியது :—

இலங்கை யளவைப் பிரதமபடம் 234.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம் ஏ. | று. | ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம் ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A 3 | கந்தேவத்தை .. .. | 4 | 3 | 2 | B12 | எலமுல்லேவத்தை .. .. | 1 | 3 | 35 |
| A 6 | கொலன்தவத்தை .. .. | 0 | 1 | 13 | B 7 | பொடியஇன்னவத்தை .. . | 0 | 3 | 23 |
| A 9 | எபிற்றகெதெறவத்தை .. | 8 | 2 | 14 | B28 | மிதெல்லகொட்டவிய .. .. | 0 | 2 | 18 |
| A10 | அஸ்வெதும்மேகும்புற .. | 2 | 0 | 36 | B29 | பலகங்கொடவத்தை .. | 0 | 2 | 3 |
| A15 | ஷை .. .. | 0 | 3 | 34 | B30 | ஷை .. .. | 2 | 0 | 32 |
| A17 | நானவலகேனேவத்தை .. | 0 | 2 | 25 | B31 | திகனெவத்தை .. .. | 0 | 0 | 17 |
| A18 | அம்பபாதென்னேவத்தை .. | 5 | 3 | 33 | B32 | ஷை .. .. | 8 | 0 | 23 |
| A19 | தொலென்கொடவத்தை .. | 3 | 2 | 26 | C24 | காறகலகேனேவத்தை .. .. | 0 | 2 | 7 |
| A20 | பங்கலாவேவத்தை .. .. | 0 | 2 | 9 | C36 | பலகம்கொடவத்தை அல்லது புஸ்செல்தன்காகேனேவத்தை .. | 22 | 1 | 21 |
| A21 | பங்கலாவேகேனேவத்தை அல்லது கந்தமண்டியேவத்தை .. . | 0 | 1 | 17 | C38 | கொவிபிற்றிய தோட்டம் .. | 10 | 2 | 3 |
| A22 | தொலென்கொடவத்தை .. | 0 | 2 | 13 | | | | | |
| A25 | அம்பகாதென்னேவத்தை .. | 0 | 1 | 36 | | | | | |
| | | | | | | | 69 | 0 | 0 |

[இரத்தினபுரி வி. உ. 4—1925.]

---

[அறிவித்தல் இலக்கம் 8,826 இரத்தினபுரி.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1925 ம் வூ (ஜூன்) ஆனிமீ 5 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம். 1899 ம். 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு. ரி. ஸ்ரேஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ரி ஸ்ரேஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென்ற் ஒபிசர்) நில நிர்ணய உத்தியோகர்த்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வயர் ஜனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

சப்பிரகாமுவா மாகாணம் இரத்தினபுரி டிஸ்திறிக் குறுவிற்றிகோறளை உடபத்து தெற்கு கெற்றலியன்பல்லக் கிராமத்திலிருக்கும் கீழ்க் குறிக்கப்படும் காணித்துண்டுகள்:—

இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், வ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 1 | கிறிகும்புறேஎல (சிற்ரூறறின் பகுதி) | 0 | 0 | 33 |
| 8 | ஷை (ஓவிறற) | 0 | 1 | 27 |
| 9 | மகாஎல (சிற்ரூற்றின் பகுதி) | 0 | 0 | 22 |
| 10 | எல (சிற்ரூறு) | 0 | 0 | 12 |
| | | 0 | 3 | 14 |

எல்லைகளாவன: வடக்கு-முத்தெற்றுபிற்றக் கிராம எல்லை, (கிறிகும்புறே எலவின் பகுதி): கிழக்கு-300,706 ம் உ. ப. ல் காணுங் காணி, முடிக்குரிய வத்துரூவ (சிற்ரூற்றுச் சேமிப்பு), முடிககுரிய வத்துரூவ (காற்பாதைச் சேமிப்பு), பொரெவிஸ் முகான்திரம் வுரித்தாடும் பகலகுறிகும்புற; தெற்கு-146.156 ம் 69 468 ம் உ. ப. ல் காணுங் காணிகள், ககன்தமக் கிராம எல்லை; மேற்கு-ககன்கமக் கிராம எல்லை, ககன்கமக் கிராம எல்லை, (மகாஎலவின் பகுதி).

II.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், வ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 2 | வத்துரூவ (சிற்ரூறறுச் சேமிப்பு) | 1 | 1 | 3 |
| 4 | ஷை (காறபாதைச் சேமிப்பு) | 0 | 0 | 25 |
| 5 | அடிப்பாற (காற்பாதை) | 0 | 0 | 13 |
| 6 | வத்துரூவ (காற்பாதைச் சேமிப்பு) | 0 | 0 | 39 |
| | | 1 | 3 | 0 |

எல்லைகளாவன: வடக்கு-கிளிகும்புற எலவின் பகுதி, முத்தெற்றுபிற்றக் கிராம எல்லை; கிழக்கு-300706 ம் 164,539 ம் உ. ப. ல் காணுங் சாணிகள்; தெற்கு-300.706 ம் உ. ப ல் காணுங் காணி, ஒரு எல; மேற்கு-கிறிகும்புற எலவின் பகுதி முத்தெற்றுப்பிற்றக் கிராம எல்லை).

III.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெவர். | விசாலம், வ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 7 | எல (சிற்ரூறு) | 0 | 0 | 37 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய வதலுரூவ (காற்பாதைச் சேமிப்பு). 300.706 ம் உ. ப. ல் காணுங் காணி) கிழக்கு-300,706 ம் உ. ப. ல் காணுங் காணி; தெற்கு-பி எல். அபெயறெட்டின வுருத்தாடும் நாகஸ்கபல்ல; மேற்கு-பி. எல். அபயறெட்டின உருத்தாடும் நாகஸ்கபல்ல, கொறனேகரூகே கிறிஅன்சியவும் மறுபேரு முருத்தாடும் பொன்னேகறலியத்த, முத்தெற்றுகனத்தே தம்பியவும் மறுபேரு முருத்தாடும் இகலகிறிகும்புற, பொரெவின் முகான்திறம் வுருத்தாடும் பகலகிறிகும்புற, கிறிகும்புறேஎலவின் பகுதி, (முத்தெற்றுபிற்றக் கிராமஎல்லை).

IV.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், வ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 15 | கிறிகும்புற | 2 | 1 | 39 |
| 16 | வெல்ல (வாய்க்கால்) | 0 | 0 | 18 |
| | | 2 | 2 | 17 |

எல்லைகளாவன: வடக்கு-146,156 ம் உ. ப. ல் காணுங் காணி, புரேவின் முகாந்திரம் உருத்தாடும் பகலகினிக்கும்புற; கிழக்கு-பொரெவிஸ் முகான்திறம் வுருத்தாடும் பகலகிறிகும்புற, முத்தெற்றுகனத்தே தம்பியவும் மறுபேரு முருத்தாடும் இகலகிறிகும்புற, கொறனேகரூகே கிறிஅளச்சியவும் மறுபேரு முருத்தாடும் பொன்னேகறலியத்த, பி. எல். அபயரெத்தின வுருத்தாடும் நாகஸ்கபல்ல, முத்தெற்றுகனத்தேதம்பியவும் மறுபேரு முருத்தாடும் உடகானகஸ்கபல்ல கால்லேகெதெற சாமெல்லாவும் மறுபேரு முருத்தாடும் இன்துற; தெற்கு-கல்லெகேதெற சாமெலவும் மறுபேரு முருத்தாடும் இனதுற, 302,100 ம் உ. ப. ல் காணுங் காணி; மேற்கு-302,100 ம் உ. ப. ல் காணுங் காணி, முடிககுரிய காகனகமத்தோட்டம், 302,100 ம் உ. ப. ல் காணுங சாணி, முடிககுரிய சாகன்கம.

V.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம, வ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 19 | வெல்ல (வாய்க்கால்) | 0 | 0 | 30 |

எல்லைகளாவன: வடக்கு-முத்தெற்றுபிற்றக் கிராமஎல்லை; கிழக்கு-முத்தெற்றுபிற்றக் கிராமஎல்லை, 164.537 ம் 160,326 ம் உ. ப. ல் காணுங காணிகள்; தெற்கும் மேற்கும்-164,539 ம் உ. ப. ல் காணுங காணி.

VI.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், வ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 20½ | கன்சபாவப்பாதை | 0 | 0 | 37 |
| 69 | பிற்றஎல (வாய்க்கால்) | 0 | 0 | 29 |
| 70 | கொடபயஎல (சிற்ரூறு) | 0 | 0 | 35 |
| 71 | பண்டாறகேன (ரூட்டுச் சேமிப்பு) | 0 | 0 | 4 |
| 72 | ஷை ( ஷை ) | 0 | 0 | 35 |
| | | 0 | 3 | 20 |

எல்லைகளாவன: வடக்கு-165,172, 168,627, 165,172, 160 704 ம் உ. ப. ல் காணுங் காணிகள், கஞ்சப்பாவ ரெருட்டு; கிழக்கு-சய்மன் அல்விஸ் வுருத்தாடும் றதாககதெனிய, 167,237, 171,016 ம் உ. ப. ல் காணுங் காணிகள், சய்மன் அல்விஸ் வுருத்தாடும றதாகே தெனிய, தெவாலேயகாவக் கிராம எல்லை; தெற்கு-தேவாலேயகாவக் கிராம எல்லை; மேற்கு-கமஎற்றிகே மத்துமகாமி மொகொற்றலவும் மறுபேரு முருத்தாடும் வத்தேகேலியத.

## VII.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|
| 30 | பாறளப்பேதெனியகொடகேன (நெல்லுச் சேமிப்பு). (காணிக்கூடாகப் போகும் காற் பாதை பிறநீங்கலாக) .. | 1 | 1 | 25 |

எல்லைகளாவன: வடக்கு-மஹனகே அகோறிஸ்சவும் மறுபேரு முருத்தாடும்பாற எப்ப, கிழக்கு-ஜி. ஜி. பொத்தவும் மறுபேரு முருத்தாடும் அலுத் செதெறவத்துயாய; தெற்கு-305,029 ம் உ. ப. ல் காணுங்காணி; மேற்கு-ககன்கமக் கிராம எல்லை.

## VIII.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|
| 33 | நாவின்னேமூக்கலான (சிற்ருற்றுச்சேமிப்பு) .. | 4 | 2 | 7 |
| 34 | நாவின்னேதொள (சிற்ருறு) .. | 0 | 0 | 22 |
| | | 4 | 2 | 29 |

எல்லைகளாவன: வடக்கு-305,029 ம் உ. ப. ல் காணுங் காணி, ஜி. ஜி. பொத்தலும் மறுபேரு முருத்தாடும் அலுத் செதெற வத்துயாய; கிழக்கு-கல்லேகெதெற, சுவாறிஸ் மறுபேரு முருத்தாடும் பன்வில்லை, கால்லே கெதெற பபொன் சினவும் மறுபேரு முருத்தாடும் ககன் தமவத்தே அஸ்வெதும்ம, கல்கே கெதெற பபொன்சினவும் மறுபேரு முருத்தாடும் ககன்கமவதகை; தெற்கு-305,033 ம் உ. ப ல் காணுங் காணி; மேற்கு-ககன்கமக் கிராம எல்லை.

## IX.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப |
|---|---|---|---|---|
| 38 | வாய்க்கால் .. | 0 | 0 | 20 |
| 39 | மாவீகும்புறேகொடகேன .. | 1 | 1 | 28 |
| | | 1 | 2 | 8 |

எலலைகளாவன: வடககு-கல்லேகெதெற பபொன் சினவும் மறுபேரு முருத்தாடும் ககன்கமவத்தை; கிழக்கு-கல் லேகெதெற தம்பியாவும் மறுபேரு முருத்தாடும் உனபன்துறகாவ அஸ்வெதும்ம, கோவில் வுரித்தாடும் கறவ்வ; தெற்கு-கோவில் வுரித்தாடும் கறவ்வ மாவீகும்புறேதெனிய (கிராமத்துக்குரிய): மேற்கு-மாவீகும்புறேதெனிய (கிராமத்துக்குரிய) 305,033 ம் உ. ப. ல் காணுங்காணி.

## X.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|
| 41 | மாவீகும்புறேதெனிய .. | 0 | 0 | 37 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-மாவீகும்புறேதெனிய (கிராமத்துக்குரிய); தெற்கு-முடிக்குரிய மாவீகும்புறே தெனிய; மேற்கு-305,033 ம் உ. ப. ல் காணுங்காணி.

## XI.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|
| 43 | வாய்க்கால் .. | 0 | 0 | 37 |
| 50 | பல்லெககெதெறவத்தேகேன .. | 0 | 3 | 24 |
| 60 | கறவ்வேகேன, அல்லது துன்முவுகேன .. | 5 | 2 | 30 |
| 61 | மாவீகும்புறேதெனிய .. | 0 | 1 | 10 |
| | | 7 | 0 | 21 |

எல்லைகளாவன: வடக்கு-(கிராமத்தாருக்குரிய) மாவீகும்புறதெனிய கோவிலுருத்தாகும் கறுல்வுவ; கிழக்கு-எல கேன்கனத்தே வத்துயாய (கிராமத்தார்க்குரிய); தெற்கு-214,692, 302,6?4, ம் உ. ப. ல். காணுங்காணி, முடிக்குரிய மாவீகும்புறேதெனிய.

## XII.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு | காணியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|
| 44 | வாய்க்கால் .. | 0 | 0 | 28 |

எல்லைகளாவன: வடக்கு-கோவில் உருத்தாடும் கறுவ்வ; கிழக்கு-கோவி லுருத்தாடுங் கறுவுவ, முத்தெற்றுகனத்தே செலென்சியவும் மறுபேரு முருத்தாடும் பட்டகேனேவத்தை, 164,540 ம் உ. ப. ல் காணுங் காணி; தெற்கும் மேற்கும்-கோவில் வுருத்தாடும் கறுவ்வ.

## XIII.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|
| 64 | ஃல (சிற்ருறு) .. | 0 | 0 | 24 |

எல்லைகளாவன: வடக்கு-69,467 ம் உ. ப. ல் காணுங் காணி, வெலேகெதறநெகற்றிகே ஓதிறிஸ் குறயும் மறுபேரு முருத்தாடு பெத்தரும்புற; கிழக்கும் தெற்கும் மேற்கும்-தேவாலேகாவக் கிராமஎல்லை.

## XIV.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|
| 66 | பட்டகேன .. | 0 | 1 | 15 |
| 67 | அடிப்பாற (பாதை) .. | 0 | 0 | 37 |
| 68 | தூல்கஸ்கேனே .. | 0 | 2 | 1 |
| | | 1 | 0 | 13 |

எல்லைகளாவன: வடக்கு-எல்கேன்கனததேவத்துயாய (கிராமத்தார்க்குரிய); கிழக்கு-றனசிங்க முதியான்சலாகே றன்தகாமியும் மறுபேரு முருத்தாடும் வத்துறவலலலியத்த அல்லது விகதலஙகதேனிய, கமஎற்றிகே மத்தும்காமி மொ கொத்தாலவும் மறுபேரு முருத்தாடும் வததேகேலியத்த, வலேகெதெற நெகெற்றிகே ஒதிறிஸ் குறவும் மறுபேரு முருத்தாடும் பெத்தகும்புற. 69,467 ம் உ. ப ல் காணுங் காணி; மேற்கு-259.681, 259,080, 214,692 ம் உ. ப. ல் காணுங் காணிகள்.

XV.—இலங்கை யளவைப் பிரதமபடம் 237.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ ப. |
|---|---|---|
| 76 .. | கொட்டாயஎல (சிறுறு) .. .. .. .. | 0 0 19 |

எல்லைகளாவன: வடக்கு-199 568 ம் உ. ப. ல் காணுங் காணிகள்; கிழக்கு-69,467 ம் உ. ப. ல் காணுங் காணி, தேவாலையகாவக் கிராமஎல்லை; தெற்கு-தெவாலேகாவக கிராமஎல்லை; மேற்கு-சைமன் அல்விஸ் உருத்தாடும் றடாகேதேனிய.

[இரத்தினபுரி, வி. உ. 5—1925.]

---

### காணி அளவையைப்பற்றிய அறிவித்தல்.

வடமேல் மாகாணத்தில் முடிக்குரிய காணிகளை வாங்க அல்லது குத்தகையாக வெடுக்கும் கேள்விப்பத்திரங்களைப் பற்றி காணியளவு இதிற் சொல்லிய திகதியின்பின் இதன்கீழ் சொல்லப்படுமாறு ஒவ்வொரு பிரிவின்படிக்கு வெவ்வேறாய் நடத்தப்படும் —

(2) மாகாணத்தை இவ்விதமாய்ப் பிரிவுபண்ணப்பட்டிருக்கின்றது:—

பிரிவு இலக்கம் (1)—தெதுறு ஓயாவுக்குத் தென்பகுதியான குருநாக்கல் டிஸ்திரிக்கின் பின்வரும் பகுதிகள்: கட்டுகம்பலகாறப்பற்று, தேவமேதிகாறப்பற்று, தம்பதேனிகாறப்பற்று, வேயுடவ்லிகாறபற்று.

பிரிவு இலக்கம் (2)—சலாப புத்தளை டிஸ்திறிக்குகள்.

பிரிவு இலக்கம் (3)—தெதுறு ஓயாவுக்கு வடபகுதியின் குருநாக்கல் டிஸ்திறிக்கின் பின்வரும் பகுதிகள்: வன்னிகாறப்பற்று, கிரியாலகாறப்பற்று.

3. 1925 ம் வரு ஆடிமீ 1 ம் திகதியிலிருந்து 2 ம் இலக்கங் கொண்ட பிரிவு மூடப்படும். அத்தேதியின்பின் அப்பிரிவுக் குட்பட்ட காணிகளைப் பற்றிய கேள்விப் பத்திரங்கள் அளவைக்கந்தோர் தலைவருக்கு அனுப்பப்படமாட்டாது ஆனாலும் அப்பிரிவுக்குட்பட்ட காணிகளிலேனும் விற்பனவுக்கு அல்லது குத்தகைக்குத் தடையிருக்கிறதோ வென்று அறியும் பொருட்டுக் கேள்விக்காரர்கள் பதிவு பண்ணிவைக்கும்படி கேள்விப் பத்திரங்கள் நமக்கனுப்பலாம்.

4. இதன்பின் 3 ம் இலக்கங்கொண்ட பிரிவு மூடப்படும். இந்தப் பிரிவிலிருக்கும் முடிக்குரிய காணிகளைக் கேட்டுப் போடப்படும் கேள்விப் பத்திரங்களைக் கூடிய சீக்கிரத்தில குருநாகல் ஏசண்டுத் துரை அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

5. மூன்றாம் பிரிவை மூடப்படுந் தேதி சீக்கிரத்தில் பிரசுரம்பண்ணப்படும். அத்தேதி 2 ம் பிரிவுகளுக குட்பட்ட எல்லாவேலைகளும் முடிவாகிய தேதிகளுக்குச் சமனாகும்

ஆர். எச். வயிற்கோண்.
புத்தளம் சலாப டிஸ்திறிக்குகளின் உதவி அரசாட்சி ஏசண்டு.

1925 ம் வரு வைகாசிமீ 27 ந் திகதி.

---

### டிஸ்திறிக் கொமிற்றி அங்கத்தவரைத் தெரிவுசெய்தல.

இத்தாலறிவிக்கிறதாவது 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கச் சட்டளைச்சட்டத்தின் 26 ம் பிரிவின்படி பர்கர்மார் 1925 ம் ஆண்டின் மிகுதிக்கும் 1926 ம், 1927 ம் ஆண்டுகளுக்கு டிஸ்திறிக் கொம்மிற்றியின் கூட்டத்தார்களாக இந்தவுத்தியோகத்தைக்கேட்க நினைத்திருக்கிற யாவரும் தங்களெண்ணத்தைத் தெரிந்துகொள்ளுந் தினத்துக்குக் கடசியாகப் பத்துநாளைக்கு முன்னே வடமாகாணத்தைச் சேர்ந்த பிறவின்சியல் ரோட்கொம்மிட்டியின் சங்கத்தலைவனுக்கு எழுத்தினால் பயன்படும்படி இத்தால் கேட்கப்படுகுது. தெரிவுபண்ணுவது—1925 ம் வரு ஆனிமீ 26 ந் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில்

யாழ்ப்பாணம் பிறவின்சியல் ரோட்கொம்மிற்றியில்,
1925 ம் ஆண்டு வைகாசிமீ 29 ந் திகதி.

சி. எவ். இங்கிள்டோ,
சக்கிறத்தார்.

---

H. ROSS COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.